விலங்குகளிடம் கேளுங்கள், அவை இந்த பூமியின் அழகை உங்களுக்குக் கற்பிக்கும்.

புனித பிரான்சிஸ் அசிச




**இன்றைய இறைவார்த்தை:**

எண்: 11: 25-29

திபா: 18: 8,10,12-14

யாக்கோபு : 5: 1-6

மாற்கு 9: 38-43, 45, 47-48

அதிலும் குறிப்பாக அவரின் தூய பெயரால் செய்யும்போது கேட்கமாட்டார். அவரது திராட்சைத் தோட்டத்தில் பலரும் வேலை செய்கின்றனர். உரிமையாளர் தனது விருந்தில் வெளியாட்களை நுழைய அனுமதித்த உவமையை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் நேரம் வரும்போது அவரது 'நம்பிக்கையாளர்களின்' விளக்குகளில் போதுமான எண்ணெய் இல்லை.

மாறாக, இயேசுவை விட்டு விலகிச் செல்வோர் பலர் உள்ளனர். இந்த 'அக்கிரமம்' இன்று உலகில் மிகவும் பரவலாக இருப்பதை நாம் காண்கிறோம். அவர்கள் இயேசுவை கேலி செய்தும், சிலர் அவரை இழிவுபடுத்துவதற்கு அதிக முயற்சியும் செய்கிறார்கள். இயேசு போதிக்கவில்லை என்றும் இயேசுவைப் பின்பற்றுபவர் விவேகமுள்ளவராக இருக்கவேண்டும் என்றும் சட்டமியற்றும் ஒரு சில சமூகங்களைப் பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம்.

விண்ணகம் இருப்பதைப் போல, நரகத்தின் உண்மையைப் பற்றிய தெளிவான எச்சரிக்கையையும் இயேசு நமக்குத் தருகிறார். நரகம் ஒரு கடல் போன்றது. அதில் இருந்து நீங்கள் வெளியேறவே முடியாது என்று அவர் நமக்குக் கற்பிக்கிறார். 'நரகம்' அணையாத நெருப்பு, அங்கே புழு இறப்பதில்லை, நெருப்பு அணையாது. விண்ணகம் மற்றும் நரகம் எவ்வாறு இருக்கும் என்று நாம் கற்பனை தான் செய்ய இயலும். நாம் செய்த செயல்களுக்கும் செய்யத் தவறியதற்கும் கணக்குக் காட்டவேண்டிய அந்த நாளுக்காக நாம் தயாராய் இருக்கவேண்டுமென்பதே நம்முடைய நம்பிக்கை.

இருந்தபோதும், இலக்கை (விண்ணகத்தை) அடைவதற்கான பாதைகள் துன்பங்கள் நிறைந்தது. விண்ணகத்திற்கான கதவு குறுகியது. மற்றும் நரகத்திற்கான கதவு மிகவும் அகலமானது என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது. நாம் கிறிஸ்துவை அனுதினமும் உறுதியுடன் அறிக்கையிட்டு, அவரை அழைத்து அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும்போது, விண்ணகத்திற்கான பாதை எளிதாகிறது. நாம் இறைவனைப் பற்றி நன்கு பேசும்போதும், நமக்குத் தெரிந்த ஒருவருடன் அவருடைய வார்த்தைகளைப் பகிர்ந்துகொள்ளும்போதும் நம்முடைய பயணம் எளிதாகிறது.

நம்முடைய வாழ்க்கை மற்றும் நம்பிக்கையின் பயணத்தில் நமக்கு உதவிடவும், அல்லது தடைக்கல்லாகவும் பலர் வருவார்கள். அதேபோல் கிறிஸ்துவைத் தேடும் ஒருவருக்கு நாம் உதவலாம் அல்லது தடுக்கலாம். நாம் ஒருவருக்கு உதவிடும்போது கண்டிப்பாக நமக்கு வெகுமதி உண்டு. புனித லயோலா இஞ்சாசியார் அடிக்கடி இவ்வாறு கூறுவார். "கடவுளின் அன்பு உங்களை விண்ணகத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றால், நரகத்தின் அச்சமாவது உங்களை அங்கு அழைத்துச் செல்லட்டும்."

ஆண்டவரே, நரக நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்றும்.


INTERNAL CIRCULATION ONLY
BUL 39/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org



NEW WAY OF BEING CHURCH

newbec

29 செப்டம்பர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 26 ஆம் ஞாயிறு
(உலக குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகள் நாள்)


**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்

மண்ணுலகின் அழுகுரலைக் கேட்டல்

# உங்களைப் பாவத்திற்கு இட்டுச்செல்லும் சந்தர்ப்பங்களை நீக்குங்கள்

"நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக்கிறார்" இயேசுவின் பெயரால் வல்ல செயல்களைச் செய்பவரைத் தடுக்க சீடர்கள் விரும்பினர். பழைய ஏற்பாட்டிலும் எல்தாது, மேதாது இருவரும் இறைவாக்குரைத்ததைப் பார்த்து பிறர் பொறாமைப்பட்டதைக் காண்கிறோம்.

ஒரு நபர் ஏதேனும் நல்லது செய்கிறாரா என்பதை நம்மால் பகுத்தறியமுடியும். பல சாதாரண மக்களும், பல நிறுவனங்களும் உண்மைக்காகவும், நீதிக்காகவும் உழைத்து, நீதி சமத்துவம், இரக்கம் மற்றும் கருணையை வழங்குவதற்காக உழைக்கின்றனர். அவர்களை எதிர்க்கவோ, தடுக்கவோ இயேசு நம்மிடம் கேட்பாரா? இல்லை. அவர் அவ்வாறு செய்யமாட்டார்.